கள். அதே போல் பல பள்ளிக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 7, 8, ஆண்டுகள் ஆகியும் அரசிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் காண்ட்ராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கு அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நீர்த்தேக்கத் திட்டத்தைப் பற்றியது. ஆகவே, நீர்த்தேக்கத் தொட்டியைப் பொறுத்த அளவில் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளிக்கூடத்தைப் பொறுத்தவரையில் என்னிடத்திலே பதில் இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இராமநாதபுரத்திலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு ஜெனரேட்டர் வாங்கும் திட்டம்

* வினா எண். 1010— திரு. த. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு 'ஜெனரேட்டர்' வாங்கும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம். இராமநாதபுரம் அரசு தலைமையிட மருத்துவ மனைக்கு மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் (ஜெனரேட்டர்) வாங்கி நிறுவுவதற்கான ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. கி. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனையில் தினமும் பல அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அப்பொழுது மின்சாரம் தடைபட்டால் ஆப்பரேஷன் நோயாளிகளுடைய நிலை என்ன என்பதை உணர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் ஜெனரேட்டர்களைப் பொருத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அரசு மாவட்ட மருத்துவமனையிலும் ஜெனரேட்டர் வைக்கப்பட வேண்டுமென்று நாம் உத்தரவிட்டிருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளே எல்லாத் தலைமை மருத்துவ மனைகளிலும் ஜெனரேட்டர் இயங்கும் என்பதை இங்கே நான் உறுதியாகச் சொல்லி விடுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மே 7]

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் இரண்டு மாதங்களுக்குள் ஜெனரேட்டர் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இன்றிருக்கிற நிலையிலே எங்கு பார்த்தாலும் கரன்ட் கட். ஆப்பரேஷன் செய்யக் கூடிய நேரத்திலே கரன்ட் ஃபெயிலியூர் ஆகிவிடுவதன் காரணமாக, ஆப்பரேஷன் தியேட்டரிலே ஆப்பரேஷன் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இதையெல்லாம் ஒழுங்குபடுத்தும் முறையிலே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு உடனடியாக ஜெனரேட்டர் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலேயிருக்கிற முகவை மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே ஜெனரேட்டர் நிறுவ G. O. Ms. No. 290, Health, dated 26th February 1981,ல் அதற்கான ஆணையை நாம் பிறப்பித்திருக்கிறோம். ஜெனரேட்டரினுடைய டோட்டல் காஸ்ட் ரூபாய் 3 இலட்சமாகும். இன்னும் சில நாட்களுக்குள்ளே அது இயங்க ஆரம்பித்துவிடும். ஆகவே, எந்தப் பிரச்னையும் மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனை ளில் ஜெனரேட்டர்கள் வைப்பது அறிந்து மகிழ்ச்சி. அதே போல், இப்பொழுது மின் வெட்டு சர்வ சாதாரணமாக இருக்கிற காரணத்தால், தாலுகா மருத்துவ மனைகளிலும் அதைப் போன்ற வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 120 தாலுகா மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஒரு ஜெனரேட்டரினுடைய விலை, இப்பொழுதே ரூபாய் 3 இலட்சமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஜெனரேட்டர் வாங்கி வைத்த பிறகு, அதற்கு டீசல் எல்லாம் தேவைப்படுகிறது. ஆகவே, அதையெல்லாம், மனதிலே கொண்டு "வையா மீடியம் பாலிசி"யாக, எந்த அளவு நிதிநிலை இடம் கொடுக்கிறதோ, அந்த வகையில், படிப்படியாக- ஃபேஸ்ட் ப்ரோகிராமாக நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவ மனை இராமநாதபுரம் நகரத்தில் இருக்கிறது. அங்கே ஜெனரேட்டர் மற்றும் பிற கருவிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால்,

மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது என்றால் அதிக தொலைவு இருப்பதால் அது இயலாத காரியமாக இருக்கிறது. ஆகவே, மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இத்தகைய ஜெனரேட்டர் போன்ற வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே- மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு, மூன்று பெரிய மருத்துவ மனைகள்—குறிப்பாக—விருதுநகர்- சாத்தூர்—சிவகாசி—போன்ற இடங்களில் இருக்கின்றன. அந்த மருத்துவ மனைகளில் எந்த மருத்துவ மனையில் இத்தகைய வசதிகளைக் கொண்டு வரலாம் என்பதை ஆராய்ந்து- அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அரசு தயாராக இருக்கும்.

தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் மருத்துவ நிலையம் துவக்கும் திட்டம்

*வினா எண். 1011—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தலைஞாயிறு ஒன்றியம் நீர்முளையில் அரசு மருத்துவ நிலையம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கக்கூடிய கிராமப் பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமிருந்தும் ஏற்கனவே உறுதியளித்த நன்கொடைத் தொகை அரசுக்கணக்கில் செலுத்தவில்லை. ஆகவே அரசு மருந்தகம் இன்னும் திறக்கப்படவில்லை.

திரு. எம். எஸ் மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து அதற்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூபாய் 1 இலட்சத்தைச் செலுத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தொகையை அனுப்ப முடிவு எடுத்து விட்டார்கள். எனவே, அந்த மருந்தகத்தை விரைவில் துவங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம் ரூபாய் 30,000 செலுத்த வேண்டும். பொதுமக்கள் ரூபாய் 10,000 செலுத்த வேண்டும். இரண்டு வருஷங்களுக்கான பராமரிப்புச்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்